REGD.No. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: ஐப்பசி 14உ திங்கள் (31—10—55) ★ ★ வெளியூர்: ஐப்பசி 15உ செவ்வாய் (1—11—55) [இதழ் 118

காலங் கடந்த ஞானோதயம்!

கோத், அக். 30—

இங்கு நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் பேசிய பிரதமர் நேரு, போர்ச்சுகீசிய காலனிகள் பற்றிக் குறிப்பிடுகையில், "இந்தத் திட்டுக்களில் உள்ள அன்னிய ஆதிக்கத்தை அகற்ற வேண்டும் என விரும்புகிறேன்; ஆனால், நம் உடலில் உள்ள ஈயை ஓட்டுவதற்காக உடலைக் காயப்படுத்திக்கொள்ளக்கூடாது" என்று பேசியிருக்கிறார்.

தென்னாடு தொழில் துறையில் பின்தங்கிக் கிடக்கிறது

அமைச்சர் சுப்பிரமணியம் ஒப்பம்!

சென்னைக் கல்லூரியை மத்திய சர்க்காரிடம் ஒப்படைக்க மறுப்பு

சென்னை, அக். 30—

உயர்தரத் தொழில் நுணுக்கக் கல்விக்கூடம் ஒன்று அமைப்பதற்காக, இப்போது சென்னையில் உள்ள கிண்டி பொறி இயல் கல்லூரியை மத்திய சர்க்காரிடம் தருவதற்கில்லை என்று மாநில சர்க்கார் தெரிவித்து விட்டிருப்பதாகக் கல்வி மந்திரி சுப்பிரமணியம் தெரிவித்திருக்கிறார்.

அகில இந்தியத் தொழில் நுணுக்கக் கல்விக் குழுவின் தென் வட்டாரக் குழுவினைத் துவக்கி வைத்துப் பேசிய அவர், 'சர்க்கார் தீவிரமான ஆலோசனைக்குப் பின்புதான் இந்த முடிவுக்கு வந்துள்ளது' என்றும் தெரிவித்திருக்கிறார்.

மேலும் அவர் குறிப்பிட்டதாவது:—

"தேர்ந்தெடுக்கப்படுகிற எந்த ஒரு இடத்திலும், உயர்தரத் தொழில் நுணுக்கக் கல்விக்கூடம் ஒன்றை அமைப்பதற்கான எல்லா வசதிகளையும் தந்து உதவ மாநில சர்க்கார் தயாராயிருக்கும்.

"இந்தியாவை தொழில்மயமாக்குவதற்குப் பெரும் தடையாயிருப்பது, தொழில் நுணுக்கக் கல்வி பெற்றோர் குறைவாயிருப்பதே!

"நமது தென் வட்டாரத்தில், தொழில் நுணுக்கக் கல்வி போதிக்கும் சில நல்ல நிலையங்கள் இருக்கத்தான் செய்கின்றன இந்த சில நிலையங்கள் நன்கு வேலை செய்துவருகின்றன

"இந்த நிலையங்களிலிருந்து வெளிவரும் நிபுணர்களுக்கு இந்த வட்டாரத்திலேயே வேலை கிடைப்பதில்லை என்றாலும், இந்தியாவின் இதர பாகங்களில் அவர்கள் நல்ல பணி ஆற்றிவருகின்றனர்.

"இந்த தென் வட்டாரத்திலேயே அவர்களுக்கு வேலை கிடைக்காததற்குக் காரணம் இந்த வட்டாரம் தொழில் துறையில் மிகவும் பின் தங்கிக்கிடக்கிறது என்பதுதான். ஆனால், இப்போதாவது, இந்த வட்டாரம் தொழில் துறையில் முன்னேற வேண்டியதின் அவசியத்தைக் கணக்கில் எடுத்துக் கொண்டு இந்த வட்டாரத்திற்குத் தொழில்கள் அதிகமாக ஒதுக்கப்பட வேண்டுவது இன்றியமையாததாகும்."

தென் வட்டாரம் என்பது—ஆந்திரம், சென்னை, மைசூர், திரு-கொச்சி, ஐதராபாத்—மாநிலங்கள் அடங்கியதாகும்.

இந்த வட்டாரக் குழுத் தலைவராக, டாக்டர் ஏ. இலட்சுமணசாமி முதலியார் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

இராஜப் பிரமுகர் தேர் இழுத்தாராம்!

அக். 29-ந் தேதியன்று காலையில் நடைபெற்ற மைசூர் சாமுண்டீசுவரியின் தேர் திருவிழாவின் போது, மைசூர் இராஜப் பிரமுகர், சிறிது தூரத்திற்கு தேரை இழுத்தார் என்று செய்தி ஒன்று கூறுகிறது.

பெல்லாரி பகுதியில்

இரும்பு, எஃகு தொழிற்சாலை

பெல்லாரியைச் சேர்ந்த ஹோஸ்பெட் பிரதேசத்தில், இரும்பு, எஃகு தொழிற்சாலை ஒன்றை நிர்மாணிக்கலாம் என்றும், இதற்கு முதலீடு அதிகமாகத் தேவையாமலால், அதில் ஒரு பகுதியை மத்திய சர்க்கார் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றும், மைசூர் சர்க்காரால் நியமிக்கப்பட்ட உலோக அபிவிருத்திக் குழு தன்னுடைய சிபாரிசுகளில் குறிப்பிட்டிருக்கிறது.

மொராக்கோவில் மீண்டும் எழுச்சி

விடுதலைக் கோரிக்கை வலுக்கிறது!

நாடெங்கும் ஆர்ப்பாட்டம்

கசாபிளாங்கா, அக். 30—

மொராக்கோவில், மீண்டும் சுதந்திரம் கோரி மகத்தான எழுச்சி தோன்றியிருக்கிறது.

"நாடு கடத்தப்பட்ட மன்னரான சிதி முகம்மது பென் யூசுப் நாடு திரும்ப வேண்டும்' என்று கோரி, மொராக்கோ தேசியவாதிகள் பெரும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருக்கின்றனர்.

பென் யூசுப்பின் ஆதரவாளர்களின் ஆர்ப்பாட்டத்தைத் தடுக்க முயன்றபோது ஆர்ப்பாட்டக்காரர்களுடன் போலீசார் மோதிக்கொண்டதின் விளைவாக அல்ஜீரிய எல்லையில் ஒரு போலீஸ் அதிகாரி உட்பட்ட மூவர் கொலையுண்டனர் என்றும், 20 மொராக்கோ மக்கள் படுகாயம் அடைந்தனர் என்றும் தெரியவருகிறது.

கசாபிளாங்கா நகரில் நடைபெற்ற கிளர்ச்சி நாள் முழுதும் நீடித்திருந்தது.

இந்த ஆர்ப்பாட்டங்களில், இருவர் காயமடைந்திருக்கின்றனர்.

முஸ்தபா பென் ரெஸ்லி பௌசெய்து என்ற பிரெஞ்சுக்காரரை ஆதரிக்கும் மொராக்கோ தலைவர் ஒரு துப்பாக்கி வீரனால் சுட்டு வீழ்த்தப்பட்டார். அவர், காலனிக்கு சுதந்திரம் வழங்குவது பற்றிய பிரெஞ்சு சர்க்காரின் புதிய திட்டத்தை எதிர்க்கும் ஒரு பிரெஞ்சுக்கார இயக்கத்தின் மொராக்கோ பிரிவின் துணைத் தலைவராக இருந்தவர்.

★

சுதந்திர இயக்கத்தின் புதிய கட்டம்

நாடு கடத்தப்பட்டு மடகாஸ்கரில் கடந்த இரண்டாண்டுக் காலமாக வாழ்ந்துவந்த பிரெஞ்சு மொராக்கோ மன்னரான சிதி முகம்மது பென் யூசுப், இன்று, தண்டனைக்காலம்முடிந்தமடகாஸ்கரிலிருந்து பிரான்சு நாட்டிற்கு விமான மூலம் புறப்பட்டிருக்கிறார்.

அவருக்குப் பதிலாக மன்னராக்கப்பட்டிருந்த சிதி மௌலே பென் அராபா பதவியிலிருந்து காலியாகி விட்டபடியால், சிதி பென் யூசுப் மீண்டும் சிங்காதனத்தில் அமருவதற்குப் பிரெஞ்சு சர்க்கார் அனுமதிக்கும் என்று மொராக்கோ மக்கள் நம்பிக்கொண்டிருக்கின்றனர்.

மொராக்கோவிற்கான பிரெஞ்சு சர்க்காரின் புதிய திட்டத்தில் இது மூன்றாவது கட்டம் என்று கூறப்படுகிறது.

பென் அராபாவை கடந்த ஒரு மாத காலத்திற்கு முன் சிங்காதனத்தைவிட்டு இறக்கியது முதல் கட்டம்; பென் அராபா இடத்திற்கு ஒரு மூவர் அடங்கிய குழு அமைத்ததும், மொராக்கோவிற்கு ஒரு பிரதிநிதித்துவ சர்க்கார் அமைத்திருப்பதும், முதல் இரண்டு கட்டங்களாகும்.

பிரெஞ்சு சர்க்கார், பென் யூசுப் மீண்டும் மன்னராக ஆக்கப்பட மாட்டார் என்று அறிவித்திருக்கின்றனர்.

தேசியவாதிகள் முழு மூச்சுடன் தங்கள் சுதந்திரக் கோரிக்கையை வலியுறுத்திவருகின்றனர்.

'ஒற்றுமை'யைக் காப்பாற்றுக!

'ஏக இந்தியா'வை நிலைநிறுத்துக!

காங்கிரஸ் ஊழியருக்கு பண்டித பந்த் 'உபதேசம்'

புதுடில்லி, அக். 29—

"மொழி அடிப்படையில் மாநிலம் வேண்டுவது கூடாது—ஆகாதது; மொழிவழி மாநிலக் கோரிக்கையை ஏற்றுக்கொண்டால் அது நாட்டைப் பலவீனப்படுத்தும்-முன்னேற்றத்தைத் தடுக்கும்," என்று, உள்நாட்டு இலாகா மந்திரி பண்டித கோவிந்த வல்லப பந்த் பேசியிருக்கிறார்.

"நாட்டின் ஒற்றுமைக்கு, ஐக்கியத்திற்கும் எல்லோரும் பாடுபட வேண்டும்; சிக்கல்களைத் தீர்ப்பதற்குக் கிளர்ச்சி நோக்குடன் அணுகுவது ஐக்கியத்தைக் குலைப்பதாகவே முடியும்.

"இந்தியாவை ஒன்றுபட்டதாக—'ஏக இந்தியா'வாக வைத்திருக்க பல மாநில மக்களும் தங்களிடையே சோதர உறவை வளர்த்துக் கொள்ளவேண்டும்," என்றும், மேற்கு டில்லி காங்கிரஸ் ஊழியர் மாநாட்டில் பேசிய அந்த மந்திரி குறிப்பிட்டிருக்கிறார்.

'எஞ்சிய தமிழ் வட்டங்கள் சென்னையுடன் இணைய வேண்டும்'

தி. த. நா. காங்கிரஸ் வலியுறுத்துகிறது

திருவனந்தபுரம்—

தேவிகுளம், பீர்மேடு, நெய்யாற்றங்கரை, சித்தூர் ஆகிய நான்கு தாலுகாக்களையும் சென்னை மாநிலத்துடன் இணைக்க வேண்டுமென, திரு—தமிழகக் காங்கிரசின் பொது உறுப்பினர் கூட்டம் இரணியலில் நடைபெற்றபோது, தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்தத் தாலுகா மக்களின் விருப்பத்தை மாநிலக் குழுவினர் மதிக்கவில்லை என்றும், தீர்மானம் கூறுகிறது.

கேரளத்துடன் தேவிகுளம், பீர்மேடு தாலுகாக்கள் இருக்க வேண்டுமென்பதற்காக, மாநிலக் குழுவினர் காட்டியுள்ள காரணங்கள் ஏற்றுக்கொள்ள முடியாதவை என்றும் தீர்மானம் கூறுகிறது.

★

சென்னை சர்க்கார் மனு

சென்னை, அக் 30—

"தேவிகுளம், பீர்மேடு தாலுகாக்களில் உள்ள பெருவாரியான தமிழ் மக்கள், இங்கு மங்குமாகப் போய்வந்து கொண்டிருப்பவர்களல்லர்; அங்கேயே குடியிருப்பவர்களாகும்; எனவே, அந்தத் தமிழ் தாலுகாக்கள் சென்னை மாநிலத்துடன் இணைக்கப் படவேண்டும்,"

என்று, சென்னை சர்க்கார், மத்திய சர்க்காருக்கு அனுப்பியுள்ள மனு ஒன்றில் குறிப்பிட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

தங்களின் கோரிக்கை நியாயமானது என்பதை நிலைநாட்ட சர்க்கார் தாங்கள் சேகரித்திருந்த புள்ளி விவரங்களையும், இதரவற்றையும், மனுவுடன் சேர்த்து அனுப்பியுள்ளதாகத் தெரியவருகிறது.

ஷேக் அப்துல்லா

காவல் தண்டனைக் காலம் நீடிக்கிறது

ஜம்மு, அக் 30—

காஷ்மீரின் முன்னாள் பிரதமரான ஷேக் முகம்மது அப்துல்லாவை மேலும் ஆறு திங்களுக்குக் காவலில் வைத்திருப்பதென முடிவு செய்யப்பட்டிருக்கிறதாம்.

இங்கிருந்து 60 மைல் தொலைவில் உள்ள சிறைச்சாலை ஒன்றில் காவல் வைக்கப்பட்டிருக்கும் அவர் கடந்த 1953 ஆகஸ்டு திங்களில், வேறு பலருடன் தடுப்புக் காவல் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டார் என்பது நினைவிலிருக்கலாம்.

★

தி. த. நா. காங்கிரஸ் உறுப்பினர் வெளிநடப்பு!

கூட்டுக் கூட்டத்தில் சம்பவம்

கோட்டயம், அக். 30—

மாநிலக் குழுவின் திட்டத்தை விவாதிப்பதற்காகக் கூடிய சட்டசபைக் காங்கிரஸ் உறுப்பினர்கள், பிரதேச மாவட்ட காங்கிரஸ் குழுத் தலைவர்கள் அடங்கிய கூட்டுக் கூட்டத்திலிருந்து திரு-தமிழகக் காங்கிரஸ் உறுப்பினர்கள் வெளியேறியிருக்கின்றனர்.

அவர்கள், 'தேவிகுளம், பீர்மேடு, நெய்யாற்றங்கரை, சித்தூர் ஆகிய தமிழ் தாலுகாக்களை சென்னையுடன் இணைக்க வேண்டும்' என்ற ஒரு தீர்மானம் கொண்டு வந்தனர்; அது, பெருவாரியான வாக்குகளால் தோற்கடிக்கப்பட்டதால் அந்த உறுப்பினர்கள் கூட்டத்தினின்றும் வெளியேறினர்.

பின்னர், 'திரு-கொச்சியிலிருந்து 5 தமிழ் தாலுகாக்களை தமிழகத்துடன் இணைப்பது கூடாது' என்ற, தீர்மானம் ஒன்றை அந்தக் காங்கிரசார் நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றனர்.

திரு-தமிழகக் காங்கிரஸ் சட்டசபை உறுப்பினர் தலைவரான இராமசாமி பிள்ளை, கூட்டத்தில் மலையாள உறுப்பினர்கள்—காங்கிரஸ் பொதுச் செயலாளரான மாதவ மேனன் உட்பட—நடந்துகொண்ட முறை கண்டிக்கத் தக்கது என்றும், அதுகுறித்து மேல் இடத்திற்குப் புகார் செய்யப்போவதாயும் தெரிவித்திருக்கிறார்.

இன்னும் இரண்டொரு நாட்களில் தனது தூதவர் இருவர் சென்னை முதன் மந்திரி காமராசரை சந்தித்து, இப்போதைய நிலை குறித்து விளக்கம் தருவர் என்றும் அவர் கூறியதாகத் தெரியவருகிறது.

அமெரிக்காவுக்கு சீனப் பிரதமர் எச்சரிக்கை

"ஏதேனும் பேச்சுவார்த்தைகள் நடத்துவதற்கு முன்பு, சீனாவில் உள்ள எல்லா அமெரிக்கக் கைதிகளையும் விடுதலை செய்ய வேண்டும் என்று அமெரிக்க சர்க்கார் பிடிவாதம் செலுத்தினால், 'கெடுபிடிப் போர்' நீடிக்கவே செய்யும்" என்று சீனப்பிரதமர் சூ-யென்-லாய் எச்சரிக்கை செய்துள்ளார்.

நம் நாடு
தி.மு.க.தினஇதழ் ஆசிரியர் இரா.நெடுஞ்செழியன்
சென்னை 31—10—'55 திங்கள்

நினைப்பூட்டுகிறேம்!

மாநில புது அமைப்புத் திட்டம் குறித்து தி. மு. கழகப் பொதுச் செயலாளர் அவர்கள் வெளியிட்டிருந்த அறிக்கையில், இப்போது திரு-கொச்சியில் இருக்கும் ஒன்பது தமிழ் வட்டங்களில், ஐந்து வட்டங்களை மட்டும் புதிய தமிழ் மாநிலத்துடன் இணைப்பது என்றும், இதர நான்கு வட்டங்களை கேரளத்துடன் இணைப்பது என்றும் குழுவினர் சிபாரிசு செய்திருந்ததைக் கண்டித்திருந்தார்.

எஞ்சிய நான்கு வட்டங்களில் தேவிகுளம், பீர்மேடு, (கொச்சி) சித்தூர் வட்டங்கள் முழுவதிலும், நெய்யாற்றங் கரையின் பெரும் பகுதியிலும் மிகப் பெரும்பான்மை மக்கள் தமிழர்களாயிருந்தும் அவை தமிழகத்துடன் இணைக்கப்படாதது பெரும் அநீதியாகும்.

தேவிகுளம், பீர்மேடு வட்டங்களைப் பொறுத்தமட்டில், அவைகள் தமிழகத்துடன் இணையவேண்டும் என்பதற்கு, தமிழ் நாட்டில் உள்ள அரசியல் இயக்கங்களில் ஏறத்தாழ எல்லோருமே ஒருமுகமான ஆதரவு தந்திருக்கின்றனர்.

திரு-தமிழகக் காங்கிரஸ் தலைவர், இரு கிழமைகளுக்கு முன்பு சென்னை வந்திருந்த போது, எஞ்சிய நான்கு வட்டங்களும் தமிழகத்துடன் இணையவேண்டும் என்பதற்கு ஆதாரமான புள்ளி விவரங்கள் பலவற்றையும் விளக்கி, அப்பகுதி மக்களின் கருத்து—ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகளில்—தமிழகத்துடன் இணையவேண்டுமென்று தெரிவிக்கப்பட்டிருப்பதையும் சுட்டிக் காட்டினர்.

பசில் குழு திட்டம்—பொதுச் செயலாளர் அறிக்கையில் குறிப்பிட்டிருப்பதைப் போல், எல்லோரையும் திருப்திபடுத்த நினைத்து எவரையுமே திருப்திப்படுத்தாத ஒன்ருகவே இருக்கிறது என்பதை இந்தியத் துணைக் கண்டம் முழுவதும், திட்டம் வெளியான பிறகு எழுந்துள்ள கொந்தளிப்பு நமக்குச் சுட்டிக் காட்டுகிறது.

பசில் குழுவினர், தென் திருவாங்கூரில் உள்ள தமிழ் தாலுகாக்களில் நான்கு கேரளத்துடன் இருக்கவேண்டும் என்பதற்காகக் கூறியுள்ள காரணங்கள் எவையும் நியாயத்தின்பாற்பட்டதல்ல — என்று, தமிழ் நாட்டு அரசியல்வாதிகள் பலரும் கூறிவருகின்றனர்.

தேவிகுளம், பீர்மேடு வட்டங்களில் சட்டசபைத் தொகுதிகளில் வாழும் மக்களின் எண்ணிக்கை 1,53,643 என்றும், இதில் தமிழர்களின் எண்ணிக்கை மட்டும் 1,05,316 என்றும் தெரிய வருகிறது.

மிகப் பெருவாரியான மக்கள் தமிழர்களாயிருந்தும், இந்த இரு வட்டங்களும் தமிழகத்துடன் இணையக்கூடாது என்பது, எந்த வகையால் நியாயமாயிருக்க முடியும்?

திரு—கொச்சி முதன் மந்திரி பனம்பள்ளி கோவிந்த மேனன் இது பற்றிக் குறிப்பிடுகையில், 'இந்த இரு சிறு வட்டங்களைக் குறித்து ஏன் பெரும் ஆர்ப்பாட்டம் செய்கிறீர்களோ தெரியவில்லை'—என்று கூறினராம்.

'இரண்டு வட்டங்கள் மிகச் சிறியவையா யிருப்பதாலேயே அவற்றைக் கோரக்கூடாது என்றால், இவர் ஏன் அந்தச் சிறு வட்டங்களை கேரளத்துடன்தான் இருக்கவேண்டும் என்று விரும்புகிருர்?'—என்று அந்த வட்டங்களில் உள்ள நியாயம் தெரிந்த சாதாரண மக்கள் கேட்கக்கூடும். அவரே வேறு ஒரு இடத்தில் 'கேரளத்தின் பொருளாதார வளத்திற்கு அந்த இரு வட்டங்களும் இன்றியமையாதவையாகும்' என்று குறிப்பிட்டிருக்கிருர்.

மாநில எல்லைகள் வகுப்பதற்கு, மொழி வழி அடிப்படைதான் நியாயமானது என்று நாங்கள் கருதுவதால், அந்த வட்டங்கள் தமிழகத்துடன்தான் இணைய வேண்டும் என்றுதான், மேனனுக்கு அந்த வட்டார மக்கள் பதில் தருவர்.

தமிழ் நாட்டிலும், திரு-தமிழகத்திலும், இந்த கோரிக்கைக்கு ஒருமுகமான ஆதரவு இருந்தும், டில்லி முதன் மந்திரிகள் மாநாட்டில் கலந்துகொண்ட சென்னை மந்திரிகள், கோரிக்கையை தேவையான அளவு வற்புறுத்தியதாகக் காணேம்!

திரு-கொச்சி முதன் மந்திரி பேசுவதைக் கண்ணுற்ருல், அவர், சிபாரிசு செய்யப்பட்டுள்ள ஐந்து தமிழ் வட்டங்களைக்கூட தமிழகத்துடன் இணைக்க அனுமதிக்கமாட்டார் போல் தோன்றுகிறது—அவ்வளவு கண்டிப்பாகப் பேசி வருகிருர் அவர்!

சென்னை மந்திரிகளோ, தங்களது வடநாட்டு எஜமானர்களுக்குக் கருணை மனு போடுபவர்களாக இருக்கின்றனரே தவிர, தமிழ் மக்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளைச் சுட்டிக்காட்டி, நியாயம் கோரும் நெஞ்சுரம் பெற்றுள்ளவர்களாக இருப்பதாகக் காணேம்!

'நேரு, தமிழர்களிடத்தில் தனிப் பிரியம் கொண்டவர்; எனவே, அவர்களது கோரிக்கையை அவர் கவனிப்பார்,' என்று நிதி அமைச்சர் பேசுகிருர். ஆனல், கடந்த காலத்தில் வடநாட்டு ஏகாதிபத்தியவாதிகள், பொதுவாகத் திராவிடர்களிடத்தில்—குறிப்பாகத் தமிழர்களிடத்தில் எவ்வளவு கருணைகாட்டி வந்திருக்கின்றனர் என்பதை, நிதி அமைச்சர் டில்லிக்குத் தூக்கிச் சென்ற 'கோரிக்கைக் காவடி'கள் பயன் எதும் தராது போய்விட்ட சோகச் சம்பவங்களே சொல்லும்!

எனவே, ஆட்சியில் அமர்ந்திருக்கும் ஆளவந்தார்கள், 'கேட்டுப் பார்ப்போம் — தந்தால் பெற்றுக்கொள்வோம்—இல்லாவிட்டால் வாளாவிருப்போம்' என்றெண்ணி, அசட்டையாயிருந்துவிடாமல், திரு-கொச்சியில் உள்ள எஞ்சிய தமிழ்ப் பகுதிகள் தமிழகத்துடன் இணைவதற்கு விழிப்புடன் காரியமாற்ற வேண்டும் என்று நினைப்பூட்டுகிறேம்.

ஜப்பானுக்கு இந்தியா அழைப்பு

காரணம் என்ன?

டோக்கியோ—

ஜப்பான் வர்த்தகத் தொழில் மந்திரி, மந்திரிசபைக் கூட்டத்தில் பேசுகையில், 'இந்தியாவின் கிழக்குக் கரைப் பகுதியில் இரும்புச் சுரங்கங்களை அபிவிருத்தி செய்வதில் பங்கேற்குமாறு ஜப்பானை இந்தியா அழைத்திருக்கிறது' என்று தெரிவித்துள்ளார்.

ரூர்கேலாவிலுள்ள இரும்புச் சுரங்கத்தை சீர்செய்து அபிவிருத்தி செய்வதற்காக 40 இலட்சம் டாலர் முதலீடு செய்யுமாறு ஜப்பானை இந்தியா கேட்டிருக்கிறதாம்.

கொழும்பு திட்ட மாநாட்டை ஒட்டி சிங்கப்பூருக்குச் சென்றிருந்த இந்தியப் பிரதிநிதி இந்த யோசனையைக் கூறியதாக ஜப்பான் அமைச்சர் கூறினராம்.

முதலீடு செய்யும் தொகைக்கு, ரூர்கேலாவில் உற்பத்தியாகும் இரும்புச் சத்தை ஜப்பான் வாங்கிக் கொள்ளலாம் என்று இந்தியப் பிரதிநிதி கூறினராம்.

மத்திய ஆட்சியினர் திட்டம் அமுலாகிறது?

சென்னை சர்க்கார் விதிகள் இயற்றுகிறது

குறைந்த வருவாயுள்ளவர்களுக்கு வீடுகள் கட்டித் தருவதற்காக இந்திய சர்க்கார் வகுத்துள்ள திட்டத்தை அமுல் நடத்துவதற்கு சென்னை சர்க்கார் விதிகள் இயற்றியுள்ளது.

இவ்விதிகளின்படி, வீடு கட்டித் தருவதற்காக—ஒரு வீட்டிற்கு உயர்ந்த பட்சமாக ரூ. 8 000 வரையில், கூட்டுறவு வீடு கட்டும் சங்கங்களுக்குக் கடன் கொடுக்கப்படும்.

ஆண்டிற்கு ரூ. 6,000-த்திற்கு மேற்படாத வருவாயுள்ளவர்களுக்குத்தான், இந்தத் திட்டத்தின்படி வீடு கட்டித் தரப்படும். ஏற்கனவே சொந்த வீடு இல்லாதவர்களுக்கே, சாதாரணமாக இந்த உதவி அளிக்கப்படும்.

சர்க்கார் அளிக்கும் கடன் தொகைகளை, தவணை விதிகளில் தான் பெற்றுக்கொள்ள வேண்டும்.

சென்னைக்கு அருகில் தொழிற்சாலை காலனி!

ரூ. 40 இலட்சம் செலவில் நிறுவப்படும்

மதுரையிறும் நிறுவ முயற்சி

சென்னைக்குச் சமீபத்திலுள்ள கிண்டியிலும், மதுரையிலும் இரண்டு தொழிற்சாலை காலனி (எஸ்டேட்)கள் ஏற்படுத்துவதற்கு சென்னை சர்க்கார் முடிவு செய்துள்ளது. கிண்டியில் இதற்கான நிலம் பெறுவதற்கு உடனடியாக உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளது; மதுரையில், எந்த இடத்தில் தொழிற்சாலைகள் காலனி ஏற்படுத்துவது என்பது பற்றி பின்னர் முடிவு செய்யப்படும்.

தொழிற்சாலைகளைக் கட்டி வாடகைக்கு விடுவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

கிண்டி தொழிற்சாலை காலனிக்கு ரூ. 40-இலட்சம் செலவிடப்படலாம்; 'ஏ', 'பி', 'சி' என்ற மூன்று பிரிவுகளில் 60 கட்டிடங்கள் கட்டப்படும்.

சிறிய கைத்தொழில்கள் ஆரம்பித்து நடத்துபவர்களுக்கு, இந்தத் தொழிற்சாலை காலனியில் மின்சார சக்தி, தண்ணீர் வசதி முதலியன செய்து தரப்படும்.

சர்க்கார் பஸ் போக்குவரத்து

விபத்துக்கள்தான் அதிகரித்துள்ளன

சென்னை, அக். 28—

சென்னை சர்க்கார் நடத்தும் பஸ் போக்குவரத்து பற்றிய 1954—55-ம் ஆண்டிற்கான நிர்வாக அறிக்கை வெளியிடப்பட்டிருக்கிறது. அதில், சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு சர்க்கார் பஸ்கள் சந்தித்த விபத்துக்கள் அதிகமாகியிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

சென்ற ஆண்டில் 370 ஆக இருந்த விபத்துக்களின் எண்ணிக்கை இந்த ஆண்டு 505 ஆக உயர்ந்திருக்கிறது என்றும், இதற்குக் காரணம் நகரில் அதிகரித்துள்ள போக்குவரத்து நெருக்கடி என்றும் கூறப்பட்டிருக்கிறது.

இந்த விபத்துக்களில் 9 மிக அபாயகரமான விபத்துக்கள் என்று கூறப்படுகிறது.

சர்க்கார்பஸ்களின் எண்ணிக்கை ஆண்டுத் துவக்கத்தில் 381 ஆக இருந்தது என்றும், ஆண்டு இறுதியில் இது 402 ஆக உயர்ந்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. 25 புதிய 'லேலண்ட்' பஸ்கள் சேர்க்கப்பட்டன என்றும், 4 பழைய வண்டிகள் உபயோகமற்றவை என ஒதுக்கப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

மொத்தம் சர்க்கார் வண்டிகள், இந்த ஆண்டில் 1,33,41.385 மைல்கள் ஓடின என்றும், 61 இடங்களுக்கு பஸ் போக்குவரத்து இருக்கிறது என்றும், 11,13,88,840 பேர்கள் பிரயாணம் செய்திருக்கின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக் கழகத்தில் முதல் விசைப் படகு

கடலில் ஆராய்ச்சி செய்ய பயன்படுத்தப்படும்

கடலில் ஆராய்ச்சி செய்வதற்கென 7·26 டன் நிறையுள்ள விசைப் படகு ஒன்று, அண்ணமலை பல்கலைக் கழகத்தில் கட்டப்படுகிறது. இந்தியப் பல்கலைக் கழகமொன்று கட்டும் முதல் விசைப் படகு இதுவேயாகும்.

30 குதிரை ஓட்ட சக்தியுள்ள இப்படகில் டீசல் எஞ்சின் பொருத்தப்பட்டுள்ளது. ஆராய்ச்சியாளர் தங்குவதற்கு ஒரு 'கேபினும்,' மற்றும் ஆராய்ச்சிகள் நடத்துவதற்கான கருவிகளும் பொருத்தப்படும் என்று தெரிகிறது.

உங்கள் குறிப்புக்கு!

★

சென்னை மாநிலத்தில் 34,800 கிராமங்கள் இருக்கின்றன.

மேட்டூர் அணையைக் கட்டுவதற்கு மொத்தம் ரூ. 4,80,00 000 செலவாகியிருக்கிறது.

சென்னை மாநகரத்தில் மொத்தம் 2,45,57,200 ஆண்களும், 2,47,84,700 பெண்களும் இருக்கின்றனர்.

பர்மாவின் மொத்தப் பரப்பளவு 2,62,000 சதுரமைல்கள்; அங்கு வாழும் மொத்தம் 1,70,00,000 மக்களில், அதன் தலைநகரான இரங்கூனில் மட்டும் 4,00,000 பேர் வாழ்கின்றனர்.

உலகத்திலேயே ஜப்பானில் தான் எரிமலைகள் அதிகம்.

1774-ம் ஆண்டில்தான், இந்தியாவில் முதன் முதலாகத் தபால் போக்கு வரத்து ஆரம்பமாயிற்று.

உலகத்தில் தினம் ஒன்றுக்கு 50,000 குழந்தைகள் பிறக்கின்றன.

பூசாரியின் சாதி வெறி!

சமூக ஊழியர் தாக்கப்பட்டார்

ராஜ்கோட், அக் 28—

சௌராஷ்டிரத்தைச் சேர்ந்த பிரபல சமூக சேவகரான இராமநாராயண் பதக் என்பவர், தாழ்த்தப்பட்ட மக்களை கோவிலுக்குள் அழைத்துச் சென்றதற்காகக் கடுமையாகத் தாக்கப்பட்டாராம்.

அருகில் உள்ள காடு ஒன்றின் நடுவில் இருக்கும் 'சதாதர் கோவில்' கடந்த ஆண்டில் தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் திறந்து விடப்பட்டது. கோவில் அதிபரும், தாழ்த்தப்பட்டவர்களை அழைத்து வர இராமநாராயணனுக்கு அனுமதி தந்திருந்தார். அதன்படி சிலநாட்களுக்கு முன்பு இராம நாராயண், சில தாழ்த்தப்பட்ட வகுப்பு மாணவர்களை அழைத்துக்கொண்டு அந்தக் கோவிலுக்குள் நுழையச் சென்றிருக்கிருர். அப்போது அந்தக் கோவில் பூசாரியும், இன்னும் சிலரும் சேர்ந்து இராம நாராயணனைத் தாக்கி, அடித்து, படுகாயப் படுத்திவிட்டிருக்கின்றனர் என்று கூறப்படுகிறது.

செஞ்சீனவில் உணவுப்பங்கீடு?

"நவம்பர் முதல் தேதியிலிருந்து, செஞ்சீன முழுவதும் எல்லா நகரங்களிலும் தானியப் பங்கீட்டு முறை ஏற்படும்," என்று, பீப்பிங் ரேடியோ அறிவித்திருக்கிறதாம்.

பெரு நகரங்கள், சிறு நகரங்கள், தொழிற்சாலைப் பட்டணங்கள், சுரங்கங்கள் உள்ள இடங்கள் ஆகியவற்றிலெல்லாம் பங்கீட்டு முறை நிலவும்.

உடலால் கடுமையாய் உழைப்பவர்களுக்குக் கொடுப்பதைவிட, நகரவாசிகளுக்குக் கோதுமை குறைவாகக் கொடுக்கப்படும்; அரிசி மிகக் குறைவாகக் கொடுக்கப்படும்.

1953-ம் ஆண்டிலேயே கம்யூனிஸ்டு சீனவின் சில நகரங்களில தானியப் பங்கீடு ஆரம்பமாயிற்ரும்; ஐந்தாண்டுத் திட்டத்தின்படி பயிர்கள் விளையாததால் இவ்வாறு செய்ய நேர்ந்ததாம்.

'இதற்கு முன் பங்கீட்டு முறை நிலவிய இடங்களில் அது சரியாய் நிர்வகிக்கப்படவில்லை' என்று பீப்பிங்கிலுள்ள மக்கள் தினசரி. தலையங்கம் எழுதியுள்ளதாம்.

சூரிய வெப்ப ஆராய்ச்சி

அமெரிக்காவில் உலகமாநாடு

டஸ்கான்—அரிசோனு, அக். 28—

இத்திங்கள் 31-ந் தேதி முதல் இரண்டு தினங்கள் இங்கு நடைபெறவிருக்கும் சூரிய வெப்ப ஆராய்ச்சி மாநாட்டில், இந்தியா உட்பட 26 நாடுகளைச் சேர்ந்த விஞ்ஞானிகள் கலந்துகொள்வர்.

இதற்குப் பிறகு நவம்பர் 1-ந் தேதி முதல் 5-ந் தேதி வரையிலும் அரிஸோனுவில், போய்னிக்ஸ் என்ற இடத்தில் சூரிய வெப்பத்தைப் பற்றிய உலக விவாத அரங்கு நடைபெறும்.

சூரிய வெப்பத்தைப் பற்றிய ஆராய்ச்சியின் பயனை எல்லோரும் உணர்ந்து கொள்ளவும், இத்துறையில் புது சாதனைகளைப் பற்றி தெரிந்துகொள்ளவும் இவ்விவாதம் வசதியளிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

ஐவரை மணம் செய்துகொண்டவர் கைது!

அமெரிக்காவைச் சேர்ந்த 'சால்ட்லேக் சிடி' என்ற பகுதியில், 49-வயதுள்ள ஒருவர், அளவுக்கு மீறி அதிக மனைவிகளை வைத்துக் கொண்டிருப்பதற்காகக் கைது செய்யப்பட்டுள்ளாராம்.

ஐந்து மனைவிகள் உள்ள அவர், 31 குழந்தைகளுக்குத் தந்தையாவார்; எல்லாக் குழந்தைகளும் 18 வயதுக்குக் கீழ் உள்ளவர்களாம்.

‘தமிழர்கள் ஏமாற்றப்பட்டுள்ளனர்’

கக்கன் கண்விழிப்பு!

மதுரை, அக். 28—

“மாநிலக் குழுவின் அறிக்கை கண்டு தமிழர்கள் ஏமாற்றம் அடைந்துள்ளனர். தேவிகுளம், பீர்மேடு தாலுகாக்கள் தமிழகத்திற்குச் சேர வேண்டியவையாகும்.

“அவற்றைத் தமிழ் நாட்டுடன் இணைக்குமாறு மத்திய சர்க்காருக்குப் பல தந்திகள் அனுப்பப்பட்டுள்ளன.

“இந்த இரு தாலுகாக்களும் தமிழ் நாட்டுடன் இணைவதற்காக தமிழ் நாடு காங்கிரஸ் தன்னாலான எல்லா முயற்சிகளையும் மேற்கொள்ளும்.

“அடுத்து நடைபெறும் செயற்குழுக் கூட்டத்தில் இது குறித்து தமிழ் நாடு காங்கிரஸ் விவாதிக்கும்,”

என்று, தமிழ் நாடு காங்கிரஸ் தலைவர் பி. கக்கன் இங்கு மதரிவித்திருக்கிறார்.

★

‘காசர்கோடு எங்களுக்கு வேண்டும்’

கன்னடியர், கேரளர் கோரிக்கை

பங்களூர், அக். 25—

‘காசர்கோடு தாலுகா முழுவதும் கேரளத்துடன் இணைய வேண்டும்’ என்று, இங்குள்ள மல்லிகார்ஜுனகோவில் திடலில் ஐக்கிய கேரளக் குழுவினர் கடந்த 22-ந் தேதியன்று நடத்திய கூட்டத்தில் தீர்மானம் மூலம் கோரினர்.

அதே இடத்தில் ஒரு நாள் முன் நடைபெற்ற கன்னடியர் கூட்டம் ஒன்றில், ‘காசர் கோடு, கர்நாடகத்துடன் இணைய வேண்டும்’ என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

★

‘விசால ஆந்திரம் உடன் அமைய வேண்டும்’

இராமகிருஷ்ணராவ் விளக்கம்

ஐதராபாத், அக். 28—

“பிரிக்கப்பட்டது போக, எஞ்சும் தெலிங்கானா பகுதியை ‘ஐதராபாத்’ என்று தனியாக இயக்க வேண்டும் என்றும், ஐந்தாண்டுகளுக்குப் பிறகு அது குறித்து முடிவு செய்யலாம் என்றும் மாநிலக் குழு சிபாரிசு செய்திருப்பதை, தான் டில்லியில் நடைபெற்ற முதன் மந்திரிகள் மாநாட்டில் எதிர்த்ததாயும், உடனடியாக தெலிங்கானா பகுதிகள், இப்போதைய ஆந்திரத்துடன் சேர்க்கப்பட்டு ‘விசால ஆந்திரம்’ அமைய வேண்டும் என்று தான் வற்புறுத்தியதாயும் ஐதராபாத் முதன் மந்திரி பி இராமகிருஷ்ணராவ், பத்திரிகையாளரிடம் தெரிவித்திருக்கிறார்.

மாநிலக் குழு சிபாரிசு செய்துள்ளபடி காரியங்கள் நடைபெறுமானால், தெலிங்கானாவில் உருவாகக் கூடிய அரசியல் நிலை குறித்தும் அவர் அங்கு தெளிவாக விளக்கியதாயும் தெரிவித்திருக்கிறார்.

★

மாநிலக் குழு சிபாரிசு

மத்திய பாரத் மந்திரி சபை எதிர்ப்பு

குவாலியர், அக். 28—

“மத்திய பாரத் மாநிலத்தை மத்தியப் பிரதேசத்துடன் இணைக்கக்கூடாது; தனி மாநிலமாகவே இருக்க வேண்டும்,”

என்று, முதன்மந்திரி தாக்கட்மால் ஜெயின், டில்லி முதன் மந்திரிகள் மாநாட்டில் தெரிவித்ததை, மத்திய பாரத் மந்திரி சபையின் தனிக் கூட்டம் ஒன்று அங்கீகரித்திருக்கிறது.

அபிவிருத்தி, தொழிலாளர் இலாகா மந்திரி ஒருவர் மட்டுமே மந்திரி சபையின் முடிவை எதிர்த்திருக்கிறாராம்.

இது குறித்து விவாதிப்பதற்காக நவம்பர் 23-ல் சட்டசபையைக் கூட்டுவது என்றும் முடிவு செய்திருக்கிறார்களாம்.

★

‘மராட்டியத்தின் பகுதி பம்பாய்’!

‘அதனை இழக்க சம்மதியோம்’

காட்கில் உறுதி

நாகபுரி, அக். 28—

எல்லா மராத்தி குஜராத்தி வட்டங்களையும் இணைத்து பம்பாயைத் தலைநகராகக் கொண்ட ஒரு கூட்டு மாநிலம் அமைக்க வேண்டும் என்ற மராத்தி காங்கிரசின் தீர்மானத்தை, மத்திய சர்க்கார் ஏற்றுக்கொள்ள மறுப்பார்களேயானால், ‘இரு மொழி பம்பாய் மாநிலம்’ என்ற மாநிலக் குழுவின் சிபாரிசை நாங்கள் ஏற்றுக்கொள்ள மாட்டோம்— போராட்டத்தில் ஈடுபடுவோம்” என்று, மீண்டும் என். வி. காட்கில் தெரிவித்திருக்கிறார்.

“மராட்டியரிடமிருந்து பம்பாயைப் பிரிக்கும் எந்த முயற்சியையும் மராட்டியர் அனுமதிக்க மாட்டார்கள்; பம்பாய் மராட்டியத்தின் ஒரு பகுதி; அது மராட்டியத்திலேயே இருந்தாக வேண்டும்,”

என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

ஒப்பந்தங்களை வரவேற்கவில்லையாம்!

“எகிப்துக்கும்—சவூதி அரேபியாவுக்குமிடையே ஏற்பட்டுள்ள இராணுவ ஒப்பந்தத்தை நாங்கள் வரவேற்கவில்லை” என்று, பிரிட்டிஷ் அயல்நாட்டு அமைச்சர் காரியாலயத்தில் கூறப்பட்டுள்ளதாம்.

சிரியாவுக்கும் — எகிப்துக்கும் இடையே ஏற்பட்ட ஒப்பந்தத்திற்கும் பிரிட்டன் கண்டனம் தெரிவித்துள்ளது.

டாக்டர்சிதம்பரனாருக்கு பாராட்டு விழா

புதுக்கோட்டை திருக்குறள் கழகச் சார்பில் 23–10–55 மாலை 5-30 மணிக்கு, நகர் மன்றத்தில் சிறப்புக் கூட்டம் ஒன்று நடைபெற்றது.

டாக்டர் அ. சிதம்பரநாதன் அவர்கள், ‘சிலப்பதிகாரம்’ எனும் பொருள்பற்றி விரிவுரை நிகழ்த்தினார்.

அவர் மேலை நாடுகள் சென்று வந்தமை குறித்தும், ‘செந்தமிழ்க் காவலர்’ என்ற சிறப்புப் பட்டம் பெற்றமை குறித்தும் பாராட்டிப் பேசும் முறையில் பேராசிரியர் சி. இலக்குவனார் அவர்கள் முன்னுரை நிகழ்த்தினார்.

அவர் பேசுகையில், நம் நாட்டின் பண்பாடு, நாகரிகம், பழக்க வழக்கங்கள், ஒழுக்க முறைகள் முதலியன மேலை நாடுகளில் நன்கு உணரும் முறையில் பரப்பப்படவில்லை என்றும், அவ்வாறு செய்யப்படாமையினால்தான் தமிழ்ப் பண்பாட்டைப் பற்றி அருவருக்கத் தக்க முறையில்சிலஇதழ்களில் எழுதப்பட்டுள்ளன என்றும், அதனைத் தவிர்த்து, நமது உயரிய பண்பாட்டைப் பிற நாடுகளுக்கு நல்ல முறையில் உணர்த்த டாக்டர் சிதம்பரம் போன்றார் மேலை நாடுகளுக்குச் செல்லவேண்டுமென்று கூறினார்.

பின்னர், டாக்டர் சிதம்பரனார் அவர்கள் பேசுகையில், சிலப்பதிகாரக் காவியம் குறித்தும், காவியத் தலைவர்களின் பண்பு குறித்தும் பேசினதுடன், தமிழரைப் பழித்த வடவரை அடக்கச் சென்ற செங்குட்டுவனது வீரச் செயலைக் குறிக்கும் வஞ்சிக்காண்டத்தை மறைத்துவிடுவதற்காகச் செய்யப்படும் முயற்சிகளைக் கண்டித்தும், வடவரது கோழைத்தனத்தை எடுத்துக் காட்டியும் பேசினதுடன், சிலப்பதிகாரத்திலுள்ள கவிநயம் மிக்க பகுதிகளையும் சுட்டிக் காட்டினார்.

இறுதியில் பேராசிரியர் இலக்குவனார் அவர்கள் நன்றியுரை கூறுகையில், “தமிழரைப் பழித்தால் தன்னைப் பழிப்பதாகக் கருதும் இன உணர்வும், அரசரே ஆயினும் தம் கருத்துக்களை எடுத்துக் கூறும் ஆற்றலும் தமிழருக்கு இருந்தால் தான் தமிழகம் தமிழகமாக விளங்க முடியும்.” என்று கூறினார்.

‘தென் பகுதி இரயில்வே மென் யூனியனை அரசியல் கட்சியிடம் அடகுவைக்க முயல்வது யார்?’

★

தென்பகுதி இரயில்வே மென் யூனியனின் தலைவரான தோழர் சி. இராகவானந்தம், ‘விடுதலை’ (சென்னை 19—10—55 பதிப்பு) இதழில் மத்திய சங்க நிர்வாகிகள் அறுவர் பேரில் வெளிவந்துள்ள அறிக்கை பற்றிய உண்மை நிலை என்ன என்பது குறித்து இரயில்வே தொழிலாளருக்கும், பொது மக்களுக்கும் விடுத்துள்ள அறிக்கையின் சுருக்கம் இங்கு தரப்படுகிறது :—

“தென் பகுதி இரயில்வே மென் யூனியனின் கொள்கைகளில், சமுதாய முன்னேற்றத்திற்கு—மூடப் பழக்க வழக்கங்களை அகற்ற— உழைப்பது என்பது முக்கியக் கொள்கை; ஆகையால், சமுதாய முன்னேற்றத்திற்காக உழைத்து வரும் பெரியார் அவர்கள் இந்த யூனியன் திறப்பு விழாவில் சொற்பொழிவாற்ற வேண்டிக்கொள்ளப்பட்டார்; அவர்களும் அதற்கு இசைந்து சொற்பொழிவாற்றுகையில், தாம், மேற்படி யூனியனை ஆதரிப்பதாகவும், அதன் வளர்ச்சிக்குத் தன்னாலான உதவி செய்வதாகவும் வாக்களித்து, யூனியன் மாநாட்டிலும் பல பொதுக் கூட்டங்களிலும் கலந்துகொண்டார்.

“ஆனால் யூனியனில் சிலர், பெரியார் அவர்கள் ஆதரவு கொடுப்பதைத் தவறாகப் புரிந்து கொண்டு, இந்த யூனியனை திராவிடக் கழகத்தின் கிளையாக நடத்த வேண்டுமென்று சொல்லி, அதற்கான முறையில் யூனியனை நடத்த ஆரம்பித்தார்கள். இதை நான் ஆதரிக்காததுடன் எதிர்க்கவும் செய்தேன். ஆகவே, யூனியனில் உட்பூசல்கள் ஆரம்பமாயின. யூனியன் ஆரம்பத்தில் கூட்டுப் பொதுச் செயலாளராக இருந்த தோழர் வை. இராமச்சந்திரன், யூனியன் நடவடிக்கைகளில் ஒரு தலைப்பட்சமான கொள்கையினைக் கடைப்பிடித்து வந்ததால் நான் எனது தலைமைப் பதவியை இராஜினாமா செய்தேன். உடனே இப்பொழுது கூட்டுப் பொதுச் செயலாளராக இருக்கும் தோழர் ஏ. கே. சச்சிதானந்தம் அவர்களும், தோழர் சி. ஆளவந்தார் அவர்களும் என்னைச் சந்தித்து, கூட்டத்திற்கு வரும்படி அழைத்ததின் பேரில் ஒத்துக்கொண்டதுடன், தோழர் வை. இராமச்சந்திரன் விலகிக் கொண்டமையால் தொடர்ந்து தலைமைப் பதவி வகிக்க ஒப்புக்கொண்டேன். எனினும், அவர் விலகியும் கூட யூனியனிலிருந்த நிலைமை மாறவில்லை. அவர் கையாண்ட கொள்கைகளையே தோழர் சச்சிதானந்தம் சற்று தந்திரமாகக் கையாள ஆரம்பித்தார். அவர் கூட்டுப் பொதுச் செயலாளர் பொறுப்பு ஏற்றபின், திராவிட கழகத் தலைவர்கள் அல்லது கழகத்தை ஆதரிக்கிறவர்கள் என்பவர்களைத் தவிர மற்றவர்களை யூனியன் கூட்டங்களில் பேச அழைப்பதற்கு மறுத்துவிட்டார்; எனவே, எனக்கும் — கூட்டுப் பொதுச் செயலாளருக்கும் போராட்டம் ஆரம்பமாயிற்று— தொடர்ந்து நடைபெற்றும் வருகிறது.

“ஆகவே, இன்று எஸ். ஆர். எம். யூ-வை அடகு வைக்க முயன்ற சதித் திட்டம் கண்டுபிடிக்கப்பட்டது;

“இப்படிப்பட்டவர்களுடைய போக்கினால் யூனியனுடைய உறுப்பினர்களுன் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்துவிட்டது.

“யூனியனில் எந்த அரசியல் கட்சியும் ஆதிக்கம் செலுத்தவிடக் கூடாதென்றும், ஒரு குறிப்பிட்ட அரசியல் கட்சி தலைவர்களை (யூனியன் கொள்கையை ஆதரிக்கிறவர்கள்) கூட்டங்களுக்குக் கூப்பிட மறுப்பதைக் கண்டிப்பதாலும் என் மீது பழி சுமத்தப்படுகிறது.

“யூனியன் கொள்கையை ஒத்துக்கொள்ளுகிற அனைவருடைய ஆதரவையும் தேடவேண்டுமென்று சொல்லுகின்ற நான், யூனியனை அரசியல் கட்சியிடம் அடகுவைக்க முயலுகிறவனா? — என்பதைப் பொதுமக்களும், இரயில்வேதொழிலாளர்களும் முடிவு செய்யட்டும்.”

அண்ணாதுரை சுற்றுப்பயணம்

★

மதுரை :

மதுரைக் கல்லூரியில் 24-10-55 காலை 11-30 மணிக்கு மாணவர் மன்றச் சார்பில், மாணவர் மன்றத்தில் நடைபெற்ற கூட்டத்தில், கல்லூரித் தலைவர் யாவரையும் வரவேற்று உரையாற்றிய பிறகு, அண்ணா அவர்கள், ‘சிந்தனையும் - செயலும்’ என்ற செயலில் விரிவுரையாற்றினார்.

உசிலம்பட்டி :

24—10—55 மாலை 5 மணிக்கு, தி. மு கழகச் சார்பில் சந்தைத் திடலில் தோழர் கருப்பு தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது தோழர்கள் அ. பொன்னம்பலனார், கே. ஏ. மதியழகன் சொற்பொழிவாற்றிய பின், அண்ணா அவர்கள் தி மு. கழகக் கொடியை ஏற்றினார். பின்னர், திராவிட நாடு திராவிடருக்கு ஆக வேண்டியதின் காரணங்களையும், ஐந்தாண்டுத் திட்டத்தின் சூழ்ச்சிகளையும் விளக்கிப் பேசினார். அண்ணா அவர்கட்கு மலர் மாலைகளும், வரவேற்புகளும் வழங்கப்பட்டது.

இரு கழகத் தோழர்கள் 101 காலணா கொண்ட முடிப்பை மாநில மாநாட்டுக்கு நிதியாக வழங்கினர்.

தேவாரம்

தேவாரம் தி. மு. கழகச் சார்பில் 24—10—55 இரவு 8–30 மணிக்கு தோழர் ஒ கிருஷ்ணமூர்த்தி தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் அ. பொன்னம்பலனார், கே. ஏ. மதியழகன், அண்ணா ஆகியோர் தி. மு. கழகக் கொள்கைகளை விளக்கி விரிவுரையாற்றினர்.

* * *

திருமணம்

25—10—55 காலை 8-30 மணிக்கு, தேவாரம் தி. மு கழக உறுப்பினர் தோழர் ச. முத்துக் கிருஷ்ணன் — தோழியர் அங்காளம்மாள் திருமணம் அண்ணா அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மணமக்கள் வாழ்க்கை ஒப்பந்தத்தை உறுதி செய்து, மலர்மாலைகள் மாற்றிக் கொண்டனர். தோழர்கள் கே. ஏ. மதியழகன், சோணைமுத்து, அ பொன்னம்பலனார் ஆகியோர் மணமக்களை வாழ்த்திப் பேசினர்.

வண்டிப்பெரியார்

25—10—55 மாலை 5 மணிக்கு, திரு-கொச்சி வண்டிப்பெரியார் நகர தி. மு. கழகச் சார்பில் மாநில மாநாட்டு நிதி அளிப்புக் கூட்டம் தோழர் கே. ஏ. கலையழகன் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் அ. பொன்னம்பலனார். கே. ஏ. மதியழகன் ஆகியோர் பேசியபின், அண்ணா அவர்கள் தி. மு. கழகத்தின் அரசியல் கொள்கைகள் பற்றி விளக்கிப் பேசுகையில், மலையாள மக்கள் தி. மு. கழகத்தைப் பற்றி சந்தேகப்பட வேண்டாம் என்றும், தற்சமயம் ஏற்பட்டுள்ள கிளர்ச்சிக்கு முன்பே தி. மு. கழகம் திரு—தமிழகம் பற்றியப் பிரச்சினைக்கு முடிவு கட்டியிருக்கிறது என்றும், மலையாளிகளுக்கு உரிய பகுதிகள் மலையாளிகளுக்கும், தமிழர்களுக்குரிய பகுதிகள் தமிழர்களுக்கும் ஆகவேண்டிய பிரச்சினையை நல்லமுறையில் தீர்த்துக் கொள்ளும் திட்டம், திராவிடநாட்டுப் பிரிவினையே என்றும் எடுத்துக் கூறி, மாநில மாநாட்டுக்கு மலையாளத் தோழர்களும் அவசியம் கலந்துகொண்டாகவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

மாநில மாநாட்டுக்கு நிதி தந்தமைக்கு கிளைக் கழகத்தைப் பாராட்டியும் நன்றி தெரிவித்துக்கொண்டார்.

பல எஸ்டேட் தொழிலாளர்கள், வண்டிப்பெரியார் நகரக் கிளைக் கழகம், கம்பம் நகர் கழகம் ஆகியவைகளின் சார்பாக அண்ணா அவர்களுக்கு கைத்தறித் துண்டுகள் அணிவிக்கப்பட்டன.

தோழர் கே. எஸ். கொச்சினி அவர்களால் மாநில மாநாட்டு நிதிக்காக ரூ. 2 நன்கொடை தரப்பட்டது.

கழகச் செய்திகள்

★

சென்னை 41-வது வட்டம் தி. மு. கழகம்

20—10—55 மாலை சென்னை திருவல்லிக்கேணி 41-வது வட்ட தி மு. கழகக் கிளை துவக்க விழாப் பொதுக்கூட்டம் மாவட்டச் செயலாளர் தோழர் இளம்பரிதி தலைமையில் நடைபெற்றது தோழியர் அலமேலு அப்பாதுரை கொடியேற்றுவித்தார். தோழர் க. அப்பாதுரை கழகத்தைத் திறந்து வைத்துப் பேசினார். தோழர்கள் டி. முனுசாமி, மா. சோ. இராசமாணிக்கம், சி. ஏ. முகிலன் இ. பி. சிற்றரசு ஆகியோர் பேசினர்.

இறுதியில் தோழர் இராவணன் அவர்களது பெண் குழந்தைக்கு தோழர் சிற்றரசு அவர்களால் ‘நாகம்மை’ என்று பெயர் சூட்டப்பட்டது. இதன் நினைவாக ‘நம் நாடு’ வளர்ச்சிக்கு ரூ. 1—1—0 நன்கொடை தரப்பட்டது—வரப்பெற்றோம் — நன்றி — பொறுப்பாளர்.

தெள்ளூரில் தி. மு. கழகத் துவக்கம்

15—10—55-ல், தெள்ளூரில் திராவிட முன்னேற்றக் கழகத் துவக்க விழா நடைபெற்றது. அன்று, தெற்குமேடு கிராமத்தில், தி. மு கழகக் கொடியை தோழர் மு. தருமராசன் ஏற்றி வைத்துச் சொற்பொழிவாற்றினர்.

மேட்டூர் அணை தி. மு. க.

25—10—55 மாலை 5-30 மணிக்கு, தோழர் இராசமாணிக்கம் இல்லத்தில் செயலாளர் தலைமையில் நடைபெற்ற செயற் குழுக் கூட்டத்தில், தோழர் இதயன் விலகல் கடிதம் ஏற்றுக்கொள்ளப்பட்டும், அவருக்குப் பதிலாக தோழர் திருவேங்கிடத்தைச் சேர்த்துக்கொண்டும், தோழர் க. கு. சின்னசாமி அவர்கள் பொதுக் குழு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டமைக்கு நன்றியும் தெரிவித்துக் கொள்ளப்பட்டதுடன், பல அனுதாபத் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

ஆங்கில மருத்துவத் துறையில் தென்னாட்டு மூலிகை!

தென்னிந்தியாவிலிருந்து இறக்குமதியாகும் ‘சர்ப்பகந்தி மூலிகை’ ஆங்கில மருந்துவத் துறையில் அற்புத நிவாரணியாக மாறியிருக்கிறதாம்.

பல்வேறு இருதய நோய்களுக்கும், வலியை நீக்கும் சாதனமாகவும் அது திருப்திகரமாக வேலை செய்கிறது. 9 ஆண்டுகளாக சித்தபிரமை பிடித்தவருக்குக்கூட இதனால் குணம் ஏற்பட்டுள்ளதாம்.

இலங்கை மொழிச் சிக்கல்

அதிகார வட்டாரங்கள் அதிர்ச்சி

தனித் தமிழ்நாடு கோரிக்கை எதிரொலிக்கிறது

கொழும்பு, அக். 29—

அலுவல் மொழி குறித்து எழுந்துள்ள சிக்கலைத் தவிர்ப்பதற்காக சிங்கள, தமிழ் மொழித் தலைவர்களடங்கிய வட்ட மேஜை மாநாடு ஒன்று நடத்துவது குறித்து, மந்திரி சபை வட்டாரத்தினர் தீவிரமாக ஆலோசித்து வருகின்றனராம்.

'சிங்களம் மட்டும் அலுவல் மொழியாக்கப்பட்டால், தனித் தமிழ் நாடு அமைக்கவேண்டும் எனக் கோருவோம்' என தமிழர் தலைவர்கள் அறிவித்திருப்பது, அதிகார வட்டங்களில் பெரும் அதிர்ச்சியை உண்டாக்கியிருக்கின்றதாகவும் கூறப்படுகிறது.

இரு மொழித் தலைவர்களும் ஒன்றுகூடி 'சிக்கலுக்கு உருவான பரிகாரம் தேடினாலன்றி நாட்டின் ஒற்றுமைக்குப் பெரும் தீங்கு ஏற்படும்' என்று அந்த அதிகார வட்டாரங்கள் அஞ்சுகின்றனவாம்.

இதற்கிடையில், 'சிங்களம் மட்டுமே அலுவல் மொழியாக வேண்டும்' என்று சிங்களவரும், 'தமிழுக்கும் சம நிலை வேண்டும்' என்று தமிழரும் தீவிரமாகப் பிரச்சாரம் செய்து வருகின்றனர்.

கண்டி நகரசபையினர், 'சிங்களம் மட்டுமே அலுவல் மொழியாக வேண்டும்' என்று தீர்மானித்திருக்கின்றனர்.

மகாழும்பு நகரசபையினர், இரண்டரை மணி நேரம் காரசாரமாக இது குறித்து விவாதித்துவிட்டு, முடிவேதும் காணாமல் கூட்டத்தை ஒத்திவைத்திருக்கின்றனர்.

கர்தையா வைத்தியநாதன் என்ற இலங்கை மந்திரி கூட்டம் ஒன்றில் பேசுகையில், 'சிறுபான்மையினரான தமிழரின் ஒத்துழைப்பின்றி, பெரும்பான்மையினர் நாடாள்பவர்களாயிருக்க முடியாது; ஜனநாயக நாட்டில், தமிழர்கள் தங்கள் மொழி இரண்டாந்தர மொழியாக்கப்படுவதை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்; சிங்களத்தைப் போலவே தமிழ் மொழிக்கும் சம நிலை தரப்பட வேண்டியதின் அவசியத்தை சிங்களவர் எண்ணிப்பார்க்க வேண்டும்' என்று குறிப்பிட்டிருக்கிறார்.

சென்னையிலா பால் காலனி?

ஒரு ஆண்டிற்குள் ஏற்படுமென நம்பிக்கை

பால் பண்ணை ஏற்படுவதால் பாலின் விலை குறையுமாம்!

சென்னை, அக். 31—

பாம்பாயிலுள்ள ஆரே பால் பண்ணை கமிஷனர், 'இன்னும் ஓராண்டு காலத்திற்குள் சென்னை நகரில் பால் பண்ணையும், பால் காலனியும் ஏற்படக்கூடும்' என்று நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

சென்னை அரசினர் வகுக்கும் 'பால்காரர் காலனித் திட்டம்' படிப்படியாக அமுல் நடத்தப்படும்; நான்கு அல்லது ஐந்தாண்டிற்குள் சென்னை நகரம் முழுமைக்கும் இப்பண்ணையிலிருந்து பால் விநியோகம் செய்யப்படும்.

இத்திட்டத்தின் கீழ் முதல் இரண்டாண்டு காலத்தில், நகரிலுள்ள 4,000 பசுக்களையும், எருமைகளையும் சென்னை சர்க்கார் இந்தக் காலனிக்கு மாற்றும்; இவசதி ஏற்படுவதையொட்டி, மற்றவைகள் படிப்படியாக மாற்றப்படக்கூடும்.

பால் காலனி முழு அளவில் வேலை செய்யத் துவங்கினால் நாளொன்றுக்கு, புட்டிகளில் அடைக்கப்பட்ட ஏடு நீக்கப்பட்ட பால் 3,00,000 ராத்தல்கள் விநியோகம் செய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நகரவாசிகளுக்கு நியாயமான விலையில் பால் கிடைக்கும்—பட்டணம் படி ரூ. 1 அல்லது 1-2-0க்கு நல்ல பால் விநியோகம் செய்வது சாத்தியமாம்.

இத்திட்டத்திற்கு, மத்திய சர்க்கார் ரூ. 1 கோடி மானியமும் கடனும் தரக்கூடுமாம்! சென்னை நகரசபை ரூ.30 அல்லது 40 இலட்சம் செலவிடுமாம்.

பால் காலனிக்கு இரண்டு மைல் தூரத்தில் 800 ஏகர் நிலத்தில் கழிவு நீரைப் பயன்படுத்தி, மாடுகளுக்குரிய தீவனம் வளர்க்கும் பண்ணையொன்றை நகரசபை ஆரம்பிக்கும்.

திட்டக் குழு அனுமதிக்குமா?

குடியிருப்பு வசதிக்கு சென்னை சர்க்கார் மானியம் கோருகிறது

சென்னை, அக். 31—

போலீஸ்காரர்களுக்கு சென்னை மாநிலத்தில் குடியிருப்பு வசதிகள் செய்து தருவதற்காக ரூ 1,90,00,000 மானியம் தருமாறு திட்டக் குழுவிடம் சென்னை சர்க்கார் கோரியிருக்கிறது.

நடப்பு ஆண்டில், போலீஸ்காரர்களுக்கு குடியிருப்பு வசதிக்கு ரூ. 25 இலட்சத்திற்கு போலீஸ் இன்ஸ்பெக்டர்-ஜெனரலிடமிருந்து சர்க்காருக்குத் திட்டம் கிடைத்திருக்கிறது.

கழகக் கூட்டங்கள்

★

கீழ்வழித்துணையாங்குப்பம்
சந்தை வெளியில்
1—11—55 மாலை 5 மணிக்கு
தலைவர்: கோ. வீரவசந்தலு
பேசுவோர்:
இரா. நெடுஞ்செழியன்
கோ. வேந்தன்
வே. அ. இளஞ்செழியன்

கூட்டத்தில், பொதுச்செயலாளரிடம் மாநில மாநாட்டு நிதி அளிக்கப்படும்.

★

ஆர்க்காடு
பெரியார் மைதானத்தில்
2—11—55 மாலை 6 மணிக்கு
பேசுவோர்:
சி. பி. சிற்றரசு
ஏ. கே. வில்வம்
ஏ. எல். சி. கிருட்டிணசாமி

மஞ்சைநகர் மறுமலர்ச்சி மன்ற உறுப்பினர்கட்கு

2-11-55 மாலை 7-30 மணிக்கு, மன்றக் கட்டிடத்தில், புதிய செயற் குழு உறுப்பினர் தேர்தல் நடைபெறும்.

வ. உ. சி. இளைஞர் கழகம்

7-ம் ஆண்டு நிறைவு விழா 1—11—55 மாலை 6 மணிக்கு, சென்னை-சேத்துப்பட்டு, வைத்தியநாத முதலி தெருவில் (பச்சையப்பன் கல்லூரி அருகாமையில்), தோழர் மு. கோ. இராசன் தலைமையில் நடைபெறும். தோழர்கள் சி. பி. சிற்றரசு, முகவை ஆர். எஸ். பாண்டியன், பி. கோகுலகிருஷ்ணன் ஆகியோர் பேசுவர்.

மந்திரி பேசிய கூட்டத்தில் மலையாள மாணவர்கள் வெளிநடப்பு!

திருச்சி, அக். 24—

இங்குள்ள கல்லூரி ஒன்றின் மாணவரிடையே தமிழில் பேசத் துவங்கினார் மந்திரி சுப்பிரமணியம்.

பரிசளிப்பு விழாவை ஒட்டி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த அந்தக் கூட்டத்திலிருந்த மலையாள மாணவர்கள் சுமார் 100 பேர் உடனே கூட்டத்திலிருந்து வெளியேறியிருக்கின்றனர்.

கூட்டத்திற்குத் தலைமை தாங்கிய மந்திரி சுப்பிரமணியம், 'இம்மாதிரி விழாக்களின்போது, கல்லூரிகளில் ஆங்கிலத்தில் பேசும் வழக்கத்தை ஒழிக்க வேண்டும்' என்று மந்திரி கூறிவிட்டு, தொடர்ந்து தமிழிலேயே பேசியிருக்கிறார்.

சென்னை சர்க்கார் கோரிக்கைக்கு திரு-கொச்சி அமைச்சர் கைவிரிப்பு

பரம்பைக்குளம் ஆறு சென்னை மாநிலத்திற்குள் உற்பத்தியாகி திரு-கொச்சியில் பாய்ந்து, மேற்குக் கடலில் கலக்கிறது. இந்த ஆற்றைத் திருப்பினால், கோவை மாவட்ட நீர்ப்பாசனத்திற்குப் பெரும் நலனாக இருக்கும். இந்த ஆற்றின் மீது அணை நிர்மாணிக்க வேண்டுமானால், அதை திரு-கொச்சி மாநில எல்லைக்குள் கட்டுவதற்குத்தான் வசதிகள் இருக்கின்றன; எனவே, அணை கட்டுவதற்கு திரு-கொச்சி சர்க்காரை சென்னை சர்க்கார் அனுமதி கோரியது.

ஆனால், அம்மாநில மராமத்து மந்திரி கே. ஐ வேலாயுதன், திரு-கொச்சி அபிவிருத்திக்கு பரம்பைக்குளம் தண்ணீர் அவசியமென்றும், சென்னை சர்க்கார் இந்தத் தண்ணீரைப் பயன்படுத்திக்கொள்ளுவதை அனுமதிக்கும் யோசனை தங்களுக்குக் கிடையாதெனவும் கூறியுள்ளார்.

அன்றியும், 'பரம்பைக்குளம் திட்டம் பற்றி பூர்வாங்கமான பரிசீலனை நடத்துவதற்கு சென்னை சர்க்கார் அனுமதி தரவில்லை; அவ்வாறு அனுமதி தருவதற்குரிய எண்ணமே சர்க்காருக்குக் கிடையாது' என்றும் குறிப்பிட்டுள்ளார்.

அணு உலகில் இந்தியாவின் நிலை

இயந்திர தொழில் புரட்சி பற்றி பண்டித நேரு

சூரத், அக். 30—

"அணுசக்தி, புதியதோர் புரட்சியை தோற்றுவித்துவிட்டது; இன்னும் 15 ஆண்டுகளில், உலகத்தின் தோற்றமே முற்றிலும் மாறிவிடும்; புதிதாக உருவாகியுள்ள அணுசக்தியை நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்வது, உலகத்தின் கையில் இருக்கிறது,"

என்று, பிரதமர் நேரு, சூரத்தில் பேசுகையில் குறிப்பிட்டுவிட்டு, மேலும் சொன்னார்:—

"நம் எதிரில், பிரம்மாண்டமான காரியங்களெல்லாம் காத்துக் கொண்டிருக்கின்றன; ஆமதாபாத்தில் இருப்பதுபோல, ஏதோ சில ஆலைகளை ஏற்படுத்துவது மட்டும் தொழில் மயமாகிவிட முடியாது; அயல் நாடுகளிலிருந்து இயந்திரங்களை வரவழைக்கும் நிலையிலிருந்து நம்மைக் காப்பாற்றக் கூடிய கனரகத் தொழிற்சாலை ஏற்படுத்துவதுதான், உண்மையான இயந்திரத் தொழில் வளர்ச்சியைக் குறிப்பதாகும்; டில்லியில் நடைபெறும் இந்தியக் கைத்தொழில் பொருட்காட்சியைக் கண்டபின், இயந்திரத் தொழில் வனத்தின் தலைவாசலில், இந்தியா இருப்பதை உணர்ந்துள்ளேன்."

'ஓசூர், கிருஷ்ணகிரி பகுதிகள் சென்னையிலேயே இருக்கும்'

தவறான கருத்துக்கு மந்திரியின் மறுப்பு

சேலம், அக். 30—

"திருத்தணியைப் பெறுவதற்காக ஓசூர் தாலுகாவை ஆந்திரத்திற்குத் தருவது என்ற வகையில் எந்த ஒரு எண்ணமும் சென்னை சர்க்காருக்கு இல்லை,"

என்று, நிதி மந்திரி சுப்பிரமணியம் தெரிவித்திருக்கிறார்.

ஆந்திர எல்லையோரப் பகுதிகளில் சுற்றுப் பயணம் செய்த மந்திரியிடம், பலர், மனுக்கள் தந்தனர்.

கன்னடியத் தூதுக் குழு ஒன்று, ஓசூர் ஆந்திரத்துடன் இணைக்கப்படக்கூடாது' என்றும், 'ஓசூரையும், கிருஷ்ணகிரியின் ஒரு பகுதியையும் சென்னையிலிருந்து பிரிக்க விரும்பினால் அவற்றை அண்டையில் உள்ள கர்நாடகத்துடன் இணைக்க வேண்டும்' என்றும் கோரியிருக்கின்றனர்.

சில ஆந்திரர்கள் அவற்றை ஆந்திரத்துடன் இணைக்க வேண்டுமெனக் கோருகின்றனர்.

கூட்டங்களில் பேசிய நிதி மந்திரி, 'ஓசூர், கிருஷ்ணகிரி பற்றி எவரும் கவலைப்படத் தேவை இல்லை; அவை சென்னையிலிருந்து பிரிக்கப்படமாட்டாது' என்று கூறியிருக்கிறாராம்.

★

கன்னடியர் அடிதடி சண்டை

தேபர் கூட்டத்தில் சலசலப்பு

இரு சட்டசபை உறுப்பினர் உட்பட பலருக்குக் காயம்

பெங்களூர், அக். 30—

'மைசூர், கன்னடத்துடன் இணையக்கூடாது' என்று கோருவோருக்கும்—'இணைய வேண்டும்—ஐக்கிய கர்நாடகம் அமைய வேண்டும்' என்று கோருவோருக்குமிடையில் அடிதடிச் சண்டைகள் இங்கு நடைபெற்றிருக்கின்றன.

காங்கிரஸ் தலைவர் தேபர், ஊழியர் கூட்டம் ஒன்றில் பேசிக்கொண்டிருக்கையில், 'மைசூரைக் காப்பாற்றுக; தனி மாநிலமாக இயங்கச் செய்க' என்ற வாசகங்கள் பொறித்த அட்டைகளைத் தாங்கிக்கொண்டு, குரல் எழுப்பியவண்ணம் கூட்டம் நடைபெற்ற கட்டிடத்தைக் கிளர்ச்சிக்காரர்கள் அணுகினர்; இதனால் கூட்டம் தடைப்பட்டது. பின், பலரின் வேண்டுகோளுக்கிணங்க, அவர்கள் அமைதியாகக் கலைந்து சென்றிருக்கின்றனர்.

ஆனால், தேபர் பேசி முடிந்ததும், மீண்டும் அவர்கள் குரல் எழுப்பியிருக்கின்றனர் இப்போது, ஐக்கிய கர்நாடக அமைப்பு ஆதரவாளர்கள் அவர்களுடன் மோதிக்கொண்டனர்; சண்டையும் மூண்டது; அடிதடிகள் பரிமாறிக்கொள்ளப்பட்டிருக்கின்றன. இரு சாராரும், மூகங்களில் கழிகளை சண்டையின்போது தாராளமாக உபயோகித்திருக்கின்றனர்.

இதற்கிடையில் தேபர், இரு சாராரையும் அமைதியாகக் கலைந்து செல்ல வேண்டிக்கொண்டிருக்கிறார்.

சண்டையின் விளைவாக, பலருக்குக் காயம் ஏற்பட்டிருக்கிறது.

இதுபோல், இங்கிருந்து 40 மைல் தொலைவில் உள்ள தும்கூர் எனும் இடத்திலும், இரு இடக்கத்தவருக்கும் சண்டை மூண்டிருக்கிறது.

காங்கிரஸ் தலைவர் தேபர் இங்கு வருவதற்கு சிறிது நேரத்திற்கு முன்பு சுமார் 75 பேர், 'மைசூர்—மைசூர்க்காரர்களுக்கே' என்று கோஷித்தவண்ணம் நகரைச்சுற்றி வலம் வந்திருக்கின்றனர். அப்போது காங்கிரஸ் தலைவரை வரவேற்கக் கூடியிருந்த கூட்டத்தினருடன் அவர்கள் மோதிக்கொண்டதின் விளைவாகப் பலருக்குக் காயம் ஏற்பட்டிருக்கிறது. இருவர் பலத்த காயம்பட்டனர்.

'மைசூர் தனி மாநிலமாக இருக்க வேண்டும்' என்று கோரும் இரு சட்டசபை உறுப்பினர்களும் அடிபட்டதாகக் கூறப்படுகிறது.

★

விசால ஆந்திரம் அமையத் தகராறு

ஐதராபாத் மந்திரி எதிர்ப்பு!

ஐதராபாத், அக். 30—

"ஐதராபாத் மாநிலத்தில் உள்ள தெலுங்கு பேசும் மக்களின் நலன்கள், தனி தெலிங்கானா மாநிலத்தில்தான் பாதுகாக்கப்பட முடியும் என்பதே எனது நீண்டநாளைய தெளிந்த சிந்தனைக்குப் பின் மேற்கொள்ளப்பட்ட கருத்தாகும்,"

என்று, ஐதராபாத் ரெவின்யூ மந்திரி கே. வி. ரங்காரெட்டி தெரிவித்திருக்கிறார்.

முதன் மந்திரி இராமகிருஷ்ணராவ் விசால ஆந்திர மாநில அமைப்பை வரவேற்று வற்புறுத்துவது தனக்கு ஆச்சரியமாயிருப்பதாயும், அவரது கருத்து தனக்கு வருத்தத்தைத் தருவதாயும் ரங்காரெட்டி தெரிவித்திருக்கிறார்.

"ஒப்பந்தங்களும், உறுதிமொழிகளும சட்டரீதியான அனுமதி பெற்றவை என்பதால் அர்த்தமற்றவையாகும்; உடனடியாக விசால ஆந்திரம் அமைக்க வேண்டுமென்பதற்காக முதன் மந்திரி தெரிவித்துள்ள வாதங்கள் ஏற்றுக்கொள்ளக்கூடியன அல்ல" என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

★

புதிய மாநில அமைப்பு

எந்தச் சிக்கலும் ஒத்திவைக்கப்படமாட்டாதாம்

புதுடில்லி, அக். 30—

"மாநிலங்களைத் திருத்தி அமைப்பது என்ற சிக்கல் உடனடியாகத் தீர்க்கப்பட்டுவிடவேண்டும்; எந்த ஒரு குறிப்பிட்ட சிக்கலையும் 5 ஆண்டுகள், அல்லது, குறிப்பிட்ட காலத்திற்கு ஒத்திவைப்பது என்பது கூடாது,"

என்ற கருத்தை, காங்கிரஸ் மேலிடம் கொண்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

எனவே, அடுத்த நவம்பர் 8, 9-ந் தேதிகளில் நடைபெறவிருக்கும் காங்கிரஸ் செயற்குழுக் கூட்டத்திலேயே, தகராறுகள் மிகுந்துள்ள விசால ஆந்திரம், சம்யுக்த மாராட்டியம், மத்திய பிரதேசம், பஞ்சாப் போன்ற மாநில அமைப்புகள் குறித்து விவாதிக்கப்பட்டு முடிவுகள் மேற்கொள்ளப்படும் என்று நம்பகமாகத் தெரியவருகிறதாம்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.